விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 பங்குனி 3 ஜ- ஆதி 23 இதழ் 34
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-3-1985

ராணுவரீதியில்தீர்வுகாணவே இலங்கைவிரும்புகிறதாம்

# வண. பஸ்ரியன் கொலைபற்றி ஐ.நா.கூட்டத்தில்பிரஸ்தாபம்!

## சர்வதேச கத்தோலிக்க பிரதிநிதி கண்டனம்

[ஜெனீவா]

இலங்கை அரசு பேச்சுவார்த்தைகள் மூலம பிரச்னைசளுக்குத் தீர்வுகாணும் முயற்சிகளைக் கைவிட்டு ராணுவரீதியில் தீர்வுகாண முயலுகிறது என்று சர்வவேச கத்தோலிக்க சமாதான இயக்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கத்தோலிக்க குருவான வண. மேரி பஸ்ரியன் உட்பட பல சமயத்தையும் சேர்ந்த தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதாகவும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ. நா: மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே கத்தோலிக்க சமாதான இயக்கப் பிரதிநிதி இவ்வாறு தெரிவித்தார்.

பாலஸ்தீனியர்களின் பாரம்

6ம் பக்கம் பார்க்க)

---

இந்தியக் கடலில்

# மீன்பிடிக்க இலங்கை அகதிகள் விருப்பம்!

(சென்னை)

இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வந்துள்ள இலங்கை தமிழ் மீனவர்கள் இந்திய கடல்பகுதியில் தமக்கு மீன்பிடிக்க அனுமதி தருமாறு தமிழ்நாடு அரசிடம் கேட்டுள்ளனர்.

அண்மையில் இலங்கைத் தமிழ் அகதிகளைச் சந்திக்க இராமேஸ்வரம் சென்றிருந்த தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு பி. இராமசாமியிடம் 100க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இக்கோரிக்கையை விடுத்தனர்.

இக்கோரிக்கை பற்றி தமிழக அரசுவிரைவில் முடிவுசெய்யும் என்றும் அமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தார்.

இராமேஸ்வரத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் தமிழ் அகதிகளை பார்வையிட்டு ஆறுதல் கூறியதுடன் அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

---

பங்களாதேஷ் பிரச்னைபோன்று இலங்கை பிரச்னையிலும்

# மத்திய அரசு உதவவேண்டும்!

## தமிழக சட்ட மேலவையில் அ. தி. மு. க. உறுப்பினர் கோரிக்கை

### இரு சபைகளிலும் சூடான விவாதம் நடந்தது

(சென்னை)

''பங்களாதேஷ் மக்களின் விடுதலைக்கு உதவ நடவடிக்கைகளை எடுத்தது போல இலங்கைத் தமிழர் பிரச்னையிலும் இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று அ. தி. மு. க உறுப்பினர் திரு. ஆதிசீதா நேற்றுத் தமிழ்நாடு சட்ட மேலவையில் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று சட்டசபையிலும், சட்டமேலவையிலும் இடம் பெற்ற விவாதத்தில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணவேண்டும் என்பதனையே உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டனர்

சட்டமேலவையில் பேசிய மற்றொரு அ தி. மு. க உறுப்பினர் திரு. முத்துலிங்கம் ''இலங்கையில் தமிழ்மக்களுக்குப் பல்வேறு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன

இந்தக் கொடுமைகள் நரகத்தில்கூட நடக்காத கொடுமைகள்'' என்று குறிப்பிட்டார். இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு ஏ டாஸ் பேசுகையில் ''மண்டபம் பகுதிக்கு வருகின்ற இலங்கைத் தமிழ் அகதிகளை மற்ற மாநிலங்ளுக்கு அனுப்ப வேண்டாம் என்று கோரிக்கை விடுத்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## காலை 3 —மாலை 4 மணிவரை மீன்பிடிக்க அனுமதி!

### விபரம் விரைவில் வர்த்தமானியில்

[கொழும்பு]

சில நிபந்தனைகளின் அடிப்படையில் கண்காணிப்பு வலயத்துக்குள் மீன்பிடிக்க அங்கீகாரம் அளிப்பதென நேற்று அரசாங்கம் தீர்மானித்தது

இந்த தீர்மானம் பற்றிய தகவலை வெளியிட்ட கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இந்த அனுமதி குறித்து விரைவில் வர்த்தமானிமூலம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மீன்பிடியாளர்களும், பாவனையாளர்களும் பாதிப்படைந்துள்ள போதிலும் தேசிய

(6ம் பக்கம் பார்க்க)

## பி. பி. ஸி. செய்தி!

(லண்டன்)

தமிழகத்தில் ஆறுதீவிரவாத விடுதலை இயக்கங்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டுள்ளதாக பி பி. ஸி. தனது செய்தியில் நேற்று அறிவித்தது.

---

## 2 இளைஞர்கள் விசாரணையில்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் நேற்றுக் காலை சோதனையிலீடுபட்டிருந்த ஆயுதப் படையினர் இரு இளைஞர்களை கைது செய்தனர்.

இவர்கள் மோட்டார் சயிக்கிளில் சென்றபோதே கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. [க]

---

## ''யாழ் மாநகரசபை நிதியோ, வரிப்பணமோ அரசாங்கத்துக்கு கொடுக்கப்படுவதில்லை''

### நிலையை விளக்கி ஆணையாளர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''யாழ் மாநகர சபையின் மூன்றுகோடி ரூபா மொத்த வருமானத்தில் சுமார் ஒரு கோடியே 70 லட்சம் ரூபா அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது மாநகரசபை நிதியிலிருந்தோ அறவிடப்படும் வரிகளிலிருந்தோ எந்த விதமான கொடுப்பனவும் அரசாங்கத்திற்குச் செய்யப்படுவதில்லை.''

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சீ வீ கே. சிவஞானம் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

''அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- சிலர் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிதி என்ற தவறான கருத்திலோ, அடிப்படையிலோ என்னவோ மூன்றுமுறை சுமார் 30 ஆயிரம் ரூபாவரை எம்மிடமிருந்து கொள்ளையடித்திருக்கிறார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க

---

இந்திய பாராளுமன்றத்தில் கோரிக்கை--------

## இராணுவ நடவடிக்கைகளை இலங்கை நிறுத்தவேண்டும்!

[புதுடில்லி]

''இலங்கையில்இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அங்குள்ள இனப்பிரச்னைக்கு விரைவாக அரசியல் தீர்வு காணப்படவேண்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## வர்த்தகர் கடத்தப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள பிரபல பிடவை வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் நேற்று நள்ளிரவு இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டார்.

---

சம்பளம் கொடுக்கமுடியாதநிலை, டீசல் இல்லை————

# பஸ்சேவை ஸ்தம்பிக்கும் நிலை!

(ஏ. வி. மாணிக்கம்)

டீசல் தட்டுப் பாட்டால் யாழ். மாவட்டத்தில் பஸ் சேவை ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியமான பாடசாலை சேவையும், தபால் சேவையும்தவிர மற்றும்பொது மக்களுக்கென குறைந்தளவு பஸ்களே சேவையிலீடுபடுத்தப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை,தபால்சேவைக்கு விடப்படும் பஸ்களால்போதியளவு வருமானம் இல்லை என்றும், இதனால் தொழிலாளருக்குக்கூட இம்மாதச் சம்பளம் முற்று முழுதாக வழங்கப்படவில்லை என்றும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(6ம பக்கம் பார்க்க)

---

## பொத்துவில் கனகரின் மகனும் 'இவர்களில்' ஒருவர்

[யாழ்ப்பாணம்]

கொக்கிளாய் இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின்போது பலியான 16 பேரின் ஒரு மாத நினைவையொட்டி நகரெங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

[6ம் பக்கம் பார்க்க]

---

திருநெல்வேலியில் சம்பவம்————

## ஆசிரியர் வீட்டில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் 30, 000ரூபா ரொக்கப் பணமும் இனந்தெரியாதவர்களினால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது.

வானில்வந்த 6 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டுவீட்டிலிருந்த பெண்களை ஒரு அறையில் பூட்டிவைத்துவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படு

(6 ம் பக்கம் பார்க்க)

---

இந்தியப்பிரதமா ரஜீவ் அறிவிப்பு————

## பஞ்சாபிலிருந்து ராணுவம் திருப்பி அழைக்கப்படும்!

(புதுடில்லி)

இந்தியாவின் பிரச்னைக்குரிய பஞ்சாப் பகுதியில் வழமையான நிலைமை மீண்டும் ஏற்பட்டதும் இந்திய ராணுவத்தை அங்கிருந்து திருப்பி அழைக்க தான் தீர்மானித்திருப்பதாக இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் ஆளும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

பஞ்சாபில் ராஜ்டிரபதி ஆட்சியை அகற்றி, மக்கள் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று

[6ம் பக்கம் பார்க்க]

---

## இலங்கை வரும் ரஜீவின் விசேட தூதர்

(புதுடில்லி)

இலங்கை உட்பட ஆறு தெற்காசிய நாடுகளுக்கு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தியின் உயர்மட்ட வெளிநாட்டுத் தூதுவராக வெளியுறவு

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முதலதரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

வத்தளை ஹுனுப்பிட்டி, அக்பர் டவுன் பள்ளிவாசலுக்கு முன்பாக 4 அறை கொண்ட வீடு, சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: எம். ஜெமீல், 39, சப்பல் வீதி யாழ்ப்பாணம், 2268

வீட்டுத் தளபாடங்கள், மின்சார அடுப்பு, தையல் மெஷீன், கமரா முதலியன உடன் விற்பனைக்குண்டு. கனகசபை, 90 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் கிழமைநாட்களில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். 2272

சிறுப்பிட்டி பாடசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் தோட்டம் செய்யக்கூடியதும், வீடு கட்டக்கூடியதுமான 'பெரியபுலம்' என்றழைக்கப்படும் காணி 8 பரப்பு 13·6 குளியும், 2 ஸ்ரீ 2911 இலக்கமுடைய A 55-ஒஸ்ரின் கேம்றிட்ஜ் கார் ஒன்றும், உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ பத்மநாதன் 44/8, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 23641 (அலுவலகம்) 2270

பருத்தித்துறை நெல்லியடி வல்வெட்டித்துறை பகுதிகளில் எமது பொருட்களை சைக்கிளில் கொண்டு சென்று கடைகளுக்கு விநியோகிப்பதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. தொடர்பு: K. ரவீந்திரன், 7/1 கலட்டிவளவு ஒழுங்கை, பருத்தித்துறை. 2281

யாழ். பெரியகடைக்கு அண்மையில் தண்ணீர் வசதியுடன் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். V. T. Ferando and Sons, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2259

பொன்னையா ஒழுங்கையில் பஸ்தரிப்பு, பாடசாலை, பிடாரி கோவிலடி. உபதபால் கந்தோருக்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணியும், பலாலி பருத்தித்துறைச் சந்தியில் 4 வெற்றுக் கடைகளும், ஒரு ஜேர்மன் இரத்தக் கொதிப்புப் (Blood Pressure Apparatus) பார்க்கும் கருவியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. A. தங்கராசா, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 2267

திருநெல்வேலி பாம் ஸ்கூல் முன் ஒழுங்கையில் உள்ள 3¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. இராசேந்திரம், பாம்ஸ்கூல் அருகாமை, கோண்டாவில். 2279

சோமசிறீ நம்: 7 அல்லர், கிரைண்டி செற், மோட்டரும், அதற்குரிய சாதனங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. சந்திரன், நீதிராசா வீதி, ஐயனர் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 2277

மிகவும் புதிய நிலையிலுள்ள வீட்டுத்தளபாடங்கள், மின் ா ர உபகரணங்கள், நிச்சி தையல் மெசின் முதலியன விற்பனைக்குண்டு. 97, (புதிய நம்பர் 197), கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2300

## விற்பனைக்கு

சுன்னுகம் சந்தியிலிருந்து 300 யார் தொலையில் யா/நாகேஸ்வரி வித்தியாசாலைக்கும், சுன்னுகம் சந்தைக்கும் வெகு அண்மையிலும் 3¼ பரப்பளவில் அமைந்து ஐந்தறையும் மற்றும் வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், ஆ. இலங்கைராஜா, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னுகம். 2278

தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் ஐஸ் பழக் கொம்பனி மெசின் உட்படச் சகல தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சி. கனகலிங்கம், ஆறுகால்மடம், (முன்பாக) ஆனைக்கோட்டை. 2287

ஒருவயதுடைய வெள்ளைநிற 'யப்பானிஸ் ஸ்பிற்'' இன ஆண் நாயும், 5 மாத மண்ணிறமுடைய ''பொமனேரியன்'' இன பெண்நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 15, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 2293

கொக்குவில் கிழக்கில், யாழ். வளாக மருத்துவ பீடத்துக்கு வடகிழக்காக பலாலி றேட்டுக்கண்மையில் 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கலாம். தொடர்பு: விளம்பர இல: 2229, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 2229

நஷனல் 7200 Deck, 20'' கலர் தொலைக்காட்சி கிற்ருர், இசைத்தட்டுகள், ஸ்பீக்கர்ஸ், Cassette Deck, Direct Drive Turn Table, 275, பலாலி வீதி, சந்தர்மடம். 2296

## தேவை

யாழ். வேளாளர் பிரன்ஸ் நகர வாசி 5 அடி 5 அங்குல உயரம், எட்டில் செவ்வாய் உள்ள மணமகனுக்கு அழகிய மணமகள் 28 வயதளவில் தேவை சீதன விபரம், குறிப்பு, புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2291 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2291

## தேவை

இறைச்சிக் கோழிகள் (Broilers) தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணு பாம், இணுவில். 2252

பிடவை வியாபாரம் செய்யக்கூடிய முன் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது விலாசம்: த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ் 21, மக்கள் நவீனசந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2265

## குத்தகைக்கு

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. இல் 900 சதுர அடி கொண்ட இரண்டு மாடிக்கட்டிடம் 1-5-1985 முதல் குத்தகைக்கு விடப்படும். கண்டி வீதியை முகப்பாகக் கொண்ட இக்கட்டிடம் மருந்துச்சாலை, புத்தகசாலை, தையல் நிலையம், பற்சிகிச்சை நிலையம், அலுவலகம் முதலியவற்றிற்கு ஏற்றது. விபரங்கட்கு தொடர்பு: வை. எம். சி. ஏ அலுவலகம், யாழ்ப்பாணம். 2294

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் வரையில் விற்பனைக்கு இருக்கிறது கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 300/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 23-3-85 சனிக்கிழமை காலை 10 மணிக்குமுன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

பொதுமுகாமையாளர்

சாவகச்சேரி.
13-3-1985. 2285




## தொழிலாளர் தேவை

யாழ். நகரிலுள்ள எமது வேலைத்தளத்துக்கு பின்வரும் தொழிலாளர்கள் தேவை. முன் அனுபவம் பற்றிய விபரங்களுடன் 18-3-85-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொருத்துனர் (FITTERS) ஒட்டுனர் (WELDERS)
கொல்லர் (BLACK SMITHS)

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
43. பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, ஒல்லாந்து செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி, செல்வதற்கான சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

செவ்வாய் முதல் வெள்ளி வரை
PRASAD REST,
11 - Upatissa Road,
BAMBALAPITIYA PHONE: 587855

சனி, ஞாயிறு, திங்கள்
வ. நல்லையா.
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. [2215]

## இன்று நடக்கும் விளையாட்டுப் போட்டி

(கொழும்பு)

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி திரு. கணநாதன் ஜெயக்குமார் கலந்து கொள்கிருர்.

## இன்று அங்குரார்ப்பணம்

(சுழிபுரம்)

சங்கானை உதவி அரசாங்க அதிர் பிரிவுக்குப்பட்ட பகுதி மனித உரிமை வெகுஜன இயக்கமொன்று இன்று வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படவுள்ளது

## HOME FINANCE LTD
## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக சீத்தை - பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD,
JAFFNA.

## அறிவித்தல்
## சிலிங்கோ நிறுவனம்

(கிளை நிறுவனம்)
(காப்புறுதி கூட்டுத்தாபன பிரதான ஏஜென்ட்)

எமது ஸ்தாபனம் இல. 249/c மின்சார நிலைய வீதியிலுள்ள கட்டிடத்திற்கு (2-ம் மாடி) மாற்றப்பட்டு வழமைபோல் சகல விதமான காப்புறுதி அலுவல்களும் நடைபெறுகின்றன என்பதை வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்ருேம்.

P. S. ARASAKESARI.
(2295)

## விருந்துபசாரம்

18-3-1985 அன்று செல்வன் ந. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும் செல்வி சாரதா அவர்களுக்கும் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தை முன்னிட்டு 19-3-1985 செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் விருந்துபசாரம் நிகழும்.

உற்ருர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.

திருமதி ப. நவரத்தினம்
கட்டுடை, மானிப்பாய். 2271

உ

## திருமண திருமுகம்

காலம்: 18-03-1985 திங்கட்கிழமை காலை 6-20 மணிமுதல் 7-20 மணிவரை

இடம்: தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்பாள் தேவஸ்தானம்

மணமகன்: திருநிறை செல்வன்
**ஆறுமுகசாமி பாலசிங்கம்**
(CGEE—ALSTHOM)

மணமகள்: திருநிறை செல்வி
**சின்னத்துரை வசந்தமலர்**
(சீமேந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

திருமண வைபவத்தில் சுற்றஞ்சூழவருகை தந்து சிறப்பிக்குமாறும் அன்று மாலை 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் மணமகனின் மல்லாகம் இல்லத்தில் நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

திருமதி
இ. ஆறுமுகசாமி
குடும்பத்தினர்,
பங்களா ஒழுங்கை,
மல்லாகம். [2232]

திரு - திருமதி
S. சின்னத்துரை
குடும்பத்தினர்,
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.

### மணிவாக்கு

சுவர்க்கம், நரகம் என்பது பற்றி எதுவும் திடமாக என்னுல் கூறமுடியாது. இவ்விரண்டு இடங்களிலும் எனக்கு நண்பர் உண்டு.

— மார்க்டுவெயின்.

## நமதுநோக்கு

## தென் அமெரிக்காவில் ஜனுதிபதி றீகன்

தென் அமெரிக்க நாடுகளில் சோவியத்ரஷ்யா நடத்தும் திருவிளையாடல்களை காலநேரத்துடன் தடுத்து நிறுத்தாவிடின் அமெரிக்க தேசத்தின் பாதுகாப்புக்குரிய கடற்பிரதேசம் பறிபோவது மட்டுமல்ல ஐக்கியஅமெரிக்காவே பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு ஆளாகுமென எச்சரிக்கை விடுத்திருக்கிறுர்.

மெக்ஸிக்கோ, நிக்கரகுவா, எல்சல்வடோர் போன்ற பல நாடுகள் இன்று ராணுவசர்வாதிகார ஆட்சியிலிருந்து அமைதியான மக்கள் ஆட்சிக்கு மாற பெரும் அவதிப்படுகின்றன.

பல நாடுகளில் வறுமையும் ஒடுக்குமுறையும் மக்கள் வாழ்வை நலிவுறுத்துகின்றன. பொருளாதாரம் சுத்த சூனியம்.

கியூபாவின் உதவியுடன் ஒரு சோஷலிச ஆட்சி அமைப்பை நிறுவவிரும்பும் நாடுகளுக்கு ரஷ்யா ராணுவ உதவி அளித்து வருவதாக றீகன் கொதித்தெழும்புகிறுர்.

இதனை முறியடிப்பது தார்மீக அமெரிக்க ஆட்சியின் அவசிய கடமையென்றும் காங்கிரசுக்கு வற்புறுத்தி வருகிறுர்.

அண்மையில், அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஷுல்ஸ் நிக்கரகுவ ஜனுதிபதி ஒற்றேக உடன் நடத்திய பேச்சுவார்த்தை பலனற்றுப்போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அந்தநாட்டில் நடைபெறும் சன்டினிஸ்டா ஆட்சி ஒரு சோஷலிஸ ஆட்சி என்பதே ஜனுதிபதியின் கூற்று அதற்கெதிராக நடந்துவரும் பயங்கரவாத இயக்கமும், அமெரிக்கா அதற்கு உதவி வரும் ஆதரவும் கடந்த நான்கு வருடங்களில் இந்த வறியநாட்டுக்கு சுமார் ஒன்றேகால் பில்லியன் டொலர் செலவை ஏற்படுத்தி இருப்பதாக குறை கூறியிருக்கிறுர்.

காங்கிரஸ் என்ன தீர்ப்பெடுத்தாலும் அதனை முறியடித்து தமது முடிவைச் செயற்படுத்தும் துணிவு றீகனுக்கும் அவருடைய ராணுவ அமைச்சருக்கும், ஜெனரல்களுக்கும் உண்டு.

பயங்கரவாதிகள் யார் என்று தீர்மானிப்பது ஜனுதிபதியின் பிரத்தியேக அதிகாரம் போலிருக்கிறது. நிக்கரகுவாவில் போராடும் ஆட்சியின் எதிரிகள் விடுதலை வீரர் என்பதே றீகனின் வாதம். இத்தகைய கொள்கை மத்திய அமெரிக்கா இலகுவில் தலையெடுப்பது அசாத்தியமென்பதைக் குறிக்கின்றது.

## தென்னுபிரிக்காவில் செனட்டர் கெனடி

தென்அமெரிக்க அரசியல், அமெரிக்க முதலாளித்துவத்தின் மிடுக்கை விளக்கினுல் தென் ஆபிரிக்காவில், ஆபிரகாம் லிங்கன் உலகுக்கு உரைத்த ஜனநாயக கோட்பாட்டை அமெரிக்க செனட்டர் எட்வார்ட் விளக்கி வருகின்ருர்.

'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது போல, கெனடி குடும்பத்தை பூண்டோடு ஒழிக்கத் திட்டமிட்ட கயவர், செனட்டர் எட்வார்ட்டை மிச்சம் விட்டது அமெரிக்காவின் நற்றவம் மட்டுமல்ல உலக நலத்துக்கே உறுதுணையாகிறது.

தென் ஆபிரிக்காவுக்கு நேரடிப் பயணம் செய்து வரும் திரு. கெனடி அந்த நாட்டில் கறுப்பர் படும் அவலங்களை மனிதாபிமான மற்ற இன ஒதுக்கல் கொள்கையை நேருக்குநேர் தாக்கி பலத்த கண்டனம் தெரிவித்திருக்கிறுர்.

இனத்துவேஷம், இனக்குரோதம், இன ஒதுக்கல்— இவை தென்ஆபிரிக்காவின் ஆன்மீக வாழ்வுக்கு சாமணி அடித்து வருவதாகக் கூறியிருக்கிறுர்.

நாகரிக உலகம் புறக்கணித்துவரும் தென் ஆபிரிக்கா, அங்குவாழும் மக்களுக்கு வாக்குரிமை மறுத்து வருவதோடு அவர்கள்மனித குலத்துக் குரியவர்களென்ற மதிப்பை நிராகரிக்கும் வகையில், மக்கள் வாழ அவர்களுக்கு உறைவிடம் அமைக்கும் உரிமையையும் பறித்து வருகின்றனர்.

இதற்கெதிராக அங்குள்ள பெரிய வர்த்தக நிறுவனங்களும் பொருளாதார அமைப்புக்கள் பலவும் புது இயக்கம் ஒன்றைத் தொடக்கி அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு தமது கண்டனத்தை தெரிவிக்கின்றன

பொருளாதாரம் குன்றியிருப்பதால், மேனுடுகள் இதற்கு செவிசாய்க்கவேண்டும்; நிலைமை திருந்த கால மெடுக்குமென்பதே இந்த விடயத்தின் விசனத்துக்குரிய அம்சம்.

### சவுக்கு சஞ்சீவி கன்றுகள் இலவசம்

[யாழ்ப்பாணம்]

விறகுப் பஞ்சத்தை போக்க ஆளுக்கொரு சவுக்கு. சஞ்சீவி நாட்டுங்கள். கன்றுகளை இலவசமாக மில்க்வைற் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்என அறிவித்துள்ளனர்.

# இலங்கை அகதிகளுக்கு உதவி: மத்திய அரசு அதிகாரிகள் திருப்தி!

[சென்னை]

இலங்கையிலிருந்து இந்தியா வந்துள்ள தமிழ் அகதிகளுக்காக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள உதவி நடவடிக்கைகள் திருப்திகரமாக இருப்பதாக, ராமேஸ்வரம் மண்டபம் முகாமிற்கு விஜயம் செய்த மத்திய அரசின் அதிகாரிகள் குழு தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் மேலதிக செயலாளர் பி. ஜே. கோர்ஸி மறுவாழ்வுப் பகுதி இயக்குனர் செல்வி எஸ். சௌகானும் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் மீனவர்களுடனும் இவர்கள் ஆலோசனை நடாத்தினர்.

அகதிகளிடமிருந்து எவ்வித புகார்களும் வரவில்லை என்று மதுரையில் திரு. கோர்ஸி தெரிவித்தார்.

கடந்த 15 நாட்களில் மத்திய அரசு 6 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகவும், மாநில அரசு செலவு செய்துள்ள பணம் அனைத்தையும் மத்திய அரசு அளிக்குமென்றும் அவர் சொன்னுர்.

இந்த அகதிகளை வேறு மாநிலங்களுக்கு கொண்டுசெல்வதற்கான சாத்தியக்கூறு இல்லை என்றும் அவர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

அதிகளவில் உதவியளிக்க தற்போதுள்ள முகாம்களிலே முடியுமென்றும், மற்ற மாநிலங்களுக்கு இவர்களைக் கொண்டுசெல்ல வேண்டுமென்ற நிலைவந்தால் மாநில அரசுடன் விவாதித்தபின் உரிய நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ளுமென்றும் அவர் கூறினுர்.

மற்ற மாநிலங்களுக்கு இலங்கைத் தமிழ் அகதிகளை அனுப்பப் போவதில்லைஎன்று தமிழ்நாடு அரசு ஏற்கனவே உறுதியாக அறிவித்து விட்டது.

இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகள் குறித்தும், இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் ஒருங்கிணைந்த அறிக்கையொன்றை மத்திய அரசிடம் தமது குழு சமர்ப்பிக்குமென்றும் அவர் மேலும் கூறினுர்.

### தவக்காலத்தின் 25-ம் நாள்



''தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.''

[லூக் 18 : 14]

மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் மட்டரகமானவர்கள், தாங்கள்தான் மகத்துவம் மிக்கவர்கள் என்ற மனநிலையில் வாழ்பவர்கள். மனித நல்வாழ்க்கைக்கு ஊறுவிளைவிப்பவர் ஆவர். மற்றவர்களது உணர்வுகளையும், உறவுகளையும் சிதைத்து மனமுறிவுகளை ஏற்படுத்தல் காட்டுமிராண்டித் தனமாகும்.

ஒவ்வொரு மனிதனும் தான் மற்றவர்களால் அன்பு செய்யப்படவேண்டும், அறியப்படவேண்டும், மதிக்கப்படவேண்டும், மகிழப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும், பாராட்டப்படவேண்டும் என்றே விரும்புகின்ருன்.

எனவே, அனைத்திற்கும் காரணமாகித் தனக்கென்ருெரு காரணமில்லாது இருக்கும் இறைவன் எல்லோருக்கும் எல்லாமாகிக் காணப்படுகின்றதைப் போன்று நாமும் எளியோரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும் இருட்டாட்டத்தைக் கைவிட்டு எல்லோரும் இன்புற்று வாழ வழி வகுப்போம்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயர்ந்த கொள்கையோடு உத்தமர்களாவோம். உயர்ந்தவர்களாவோம். உன்னத இறைவனின் உறவினில் மலர்வோம்.

வண. வின்சென்ற்பற்றிக்
அ. ம. தி.

# உலக அரங்கு

## பிரிட்டன்:

பிரிட்டனில் ஒரு வருடமாக நடந்து வந்த சுரங்கத்தொழிலாளர் வேலைநிறுத்தம் மெல்லமெல்லமாய் பிசுபிசுத்துவிட்டது. கடைசியட்டும் நின்று பிடித்தவர்கள் வெல்ஷ் தொழிலாளர்.

பிரிட்டனின் கரிச்சுரங்களில் உற்பத்திக்கு பெயர் போனவை வெல்ஷில் (Wales) உண்டு. அங்கு தொழில் செய்வோர் சுரங்க வாழ்வில் நம்பிக்கை கொண்டவர்கள். வேலைநிறுத்தம் என்று சங்கம் தீர்மானம் எடுத்தால் அதனை நடைமுறைப்படுத்துவதில் என்ன துன்பங்களையும் அனுபவிக்கும் பண்புடையவர். வறுமை விரட்டினுலும், அதற்கு அஞ்சாதவர்; ஆனுல் வேலைநிறுத்தத்தைக் குழப்பும் கருங்காலி அல்லது Seab என்ற வடுவுக்கு பெரிதும் அஞ்பவர், இந்தவடு பரம்பரையாக நிலைத்திருப்பதை அவர்கள் அறிவார்கள்.

## போலந்து

போலந்தில் மூன்று வருடத்துக்குமுன் சொலிடாறிற் என்ற சங்கம் தடைசெய்யப்பட்ட காலம் தொட்டு போலந்தின் கத்தோலிக்க மதநிறுவனம் அரசின் மிகப் பலத்த எதிரியாகத் திகழ்கிறது. கொலைசெய்யப்பட்ட மதகுரு வணக்கத்துக்குரிய ஜெரி பொப்பிலுஸ்கோ போன்ற அஞ்சாநெஞ்சுடையவர் பலர் இல்லாவிட்டாலும் ஆட்சியின் கொள்கையை எதிர்ப்பது மதநிறுவனத்தின் தூய கடமையெனக் கருதப்படுகிறது.

26 நாள் நடைபெற்ற கொலை வழக்கில் போலத்தின் இரகசிய பொலிஸ் தலைவரையும் இன்னும் மூன்று உள்நாட்டு அமைச்சின் அதிகாரிகளையும் குற்றவாளிகளாகக் கண்டு நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முதலாவது குற்றத்துக்கு 25 வருடம், மற்றும் இருவருக்கு 15, நான்காம் ஆளுக்கு 14 வருடம்.

மரணதண்டனை விதிக்கப்பட்டாலும் மதநிறுவனம் அதனை சிறைத் தண்டனையாக மாற்றக் கோரியிருக்கும். கத்தோலிக்க சபை ஆறுதலடைந்துள்ளது. சொலிடற்றித் தலைவர் வலேசா இந்தத் தீர்ப்பு நியாயமானதென்று கொண்டார்.

மக்களுக்கும் ஆட்சிக்கும் தொடர்பில்லையென்பதையே இக்கொலை விளக்குகிறது. எதிர்த்து நிற்கும் கத்தோலிக்க மதநிறுவனத்துடன் ஆட்சியாளர் மாறுபட்டால் இந்த வழக்கின் பின் அவ்வித பரபரப்பை ஏற்படுத்துவது உசிதமல்ல என்ற உணர்வு ஆட்சியில் காணப்படுகிறது.

## இஸ்ரேல்

இஸ்ரேலின் புதிய பிரதமர் பேர்ஸ் தமது படைகளை லெபனுனிலிருந்து திருப்பி அழைப்பதே தமது உடனடிப் பணியெனக் கருதுகிறுர்.

''நாம் லெபனுன் மண்ணைக் கவர நினைக்கவில்லை; அங்கு போர்புரிய விரும்பவில்லை. தங்கள் நாட்டை ஆக்கவோ அழிக்கவோ எடுக்கும் பொறுப்பு லெபனுன் மக்கள் உடையதே'' என்று வேதாந்தம் பேசுகின்ருர்.

அமெரிக்க நிதி உதவி பெற்றிருக்கிறுர். நாட்டு மக்களிடம், ஆட்சியில் நிலவுகின்ற பிளவுகளையும் பிணக்குகளையும் சீர்செய்து ஒற்றுமைப்படுத்துவதே தம் புதிய பணி என்றும், கடந்த ஐந்து மாதங்களில் இந்த நோக்கம் கைகூடுமென்ற சாத்தியக்கூறுகளைக் காண்கின்ருர்.

'அமைதிக்கொரு மனிதன்' என்பதே இவர்பற்றி அமெரிக்க, இஸ்ரேலிய அபிப்பிராயம்.

## தென்கொரியா

தென்கொரியாவின் எதிர்க்கட்சித் தலைவர் அமெரிக்க அஞ்ஞாதவாசத்திலிருந்த 'கிம்' கிம்போ சர்வதேசவிமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவருக்கு கிடைத்த 'வரவேற்பு' இன்றும் கண்டணக்கணைக்கு உதவிவருகிறது. தமக்கு அடிவிழுந்தது பற்றி தெளிவாகத் தெரிவிக்கிறுர் கிம்.

அமெரிக்காவே தென்கொரியாவை வளர்த்து பேணிவரும் வல்லரசு; இருப்பனும் றீகனின் கட்டளைக்கு ஜனுதிபதி ஷுன் என்றும் கீழ்ப்படியத் தயாரில்லை என்று மக்களுக்குக் காட்டுகிறுர்.

எதிர்க்கட்சிக்கு கடந்த தேர்தலில் நல்ல வெற்றி. ஆளும் கட்சிக்கு அடுத்து பலமுடைய கட்சி அது. எதிர்க்கட்சிக்கு கூடிய சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லிவரும் ஜனுதிபதி 1988ல் தம்முடைய ஏழு வருட ஆட்சி முடிவடையுமென்றும். தாம் தேர்தலில் மீண்டும் நிற்கப்போவதில்லையென்றும் சொல்லிவருகிறுர்.

அது என்னவானுலும் எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு சுமுகமான ஆட்சிமுறையை ஏற்படுத்தாவிட்டால் கிம் தமது போரை தொடருவாரெனக் கூறப்படுகிறது.

பல எதிர்ப்புக்கள் மத்தியில் ஆட்சி நடத்தும் ஷுன், பல பொருளாதார மாற்றங்களை சமாளிப்பதில் எவ்வாறு நடந்துகொள்வாரென்பது இருந்து பார்க்கவேண்டும்.

தென்னுபிரிக்க ஜொஹான்ஸ்பேர்க்கின் அங்கிளிக்கன் பிஷப்பாக அண்மையில் நோபல்பரிசுபெற்ற ஆயர் டெஸ்மன்ட் ரூரு நியமிக்கப்பட்டுள்ளார். 2000 பேர் (வெள்ளையர் - கறுப்பர் கொண்ட) கூட்டம் இந்த வைபவத்தைக் கண்டு மகிழ்ந்தது.

இன ஒதுக்கலுக்குப் பலியான தென்ஆபிரிக்காவின் முதலாவது கறுத்த ஆயர் இவரே. 53 வயதுடைய பிஷப் ரூரு இன ஒதுக்கல் என்ற கொடுமையான கொள்கை தென்ஆபிரிக்காலிலிருந்து 2 வருடங்களுக்கு ஒழிக்கப்படவேண்டும். இன்றேல் பொருளாதார பகிஷ்கரிப்பு போன்ற தீவிர நடவடிக்கைகளில் இறங்குவேன் என்று உரையாற்றினுர்.

### வளைகுடாப் போர் மும்முரம்—

# தலைநகர்கள் மீது குண்டுமாரி, ஏவுகணை தாக்குதல்! பன்மாடிக் கட்டடங்கள் தரைமட்டம்!!

(கெய்ரோ)

வளைகுடாப் போர் இப்போது மும்முரமடைந்துள்ளது. ஈராக்கும் ஈரானும் பரஸ்பரம் தலைநகர்கள் மீது குண்டுமாரிகளைப் பொழிந்து, ஏவுகணைகளால் தாக்கி பன்மாடிக் கட்டிடங்களையும், அரசு அலுவலகங்களையும், பொதுமக்கள் வாழும்பகுதிகளையும் சின்னபின்னமாக்கி சிதைக்கின்றன.

ஈரானுக்கும் ஈராக்குக்குமிடையிலான போர் தீவிரமடைந்து, இரு நாடுகளுக்குமிடையிலான தலைநகரங்களும் இதர பல நகரங்களும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளன.

ஈராக்கிய தலைநகரான பாக்தாத்தில் முக்கியமான வங்கியொன்று தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்குப் பழிவாங்கும் செயல் போல, ஈரானிய தலைநகரான தெஹ்ரானை ஈராக்கிய விமானங்கள் தாக்கியுள்ளன.

ஈரானின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னியின் இல்லத்துக்கு வெகு அண்மித்த ஓரிடத்தில், ஈராக்கிய விமானங்கள் குண்டு வீசித் தாக்கியிருப்பதாக தெஹ்ரானில் வாழும் ஈரானியர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்திய ரகசியங்களை விற்ருர்கள் என்பதற்குப் போதிய சான்றுகள்— — 18 பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்!

[புதுடில்லி]

இந்திய அரசாங்கத்தின் ரகசியங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள இந்திய அதிகாரிகள் பதினெட்டுப் பேரையும் நீதிமன்றங்களில் நிறுத்தி விசாரணைசெய்யப் போதியளவு சான்றுகள் இப்போது கிடைத்துள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

சில ராஜதந்திரிகள் உட்பட வெளிநாட்டவர்கள் சிலரும் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தார்களென்று உள்துறை அமைச்சர் திரு சவான் இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிருர்.

''அந்த வெளிநாடுகள் எவ்வ என்று பகிரங்கமாகக் குறிப்பிடுவது இந்தியாவின் வெளியுறவுக்கு நல்லதல்ல'' என்று கூறிய சவான், பெயர்களை வெளியிட மறுத்துவிட்டார்.

பிரான்ஸ், சோவியத்யூனியன், கிழக்கு ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளின் வர்த்தகர்களுக்கும், ராஜதந்திரிகளுக்கும் இந்திய ரகசியங்கள் விற்பனைசெய்யப்பட்டனவென்று இந்திய அரசு அதிகாரிகள் முன்னர் ஒருதடவை அறிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.




வாங்கும் ஒவ்வொரு றேனேல்ட்ஸ் பேனுவுக்கும் நீங்கள் பரிசு பெறலாம்.

வெல்லப்படுவதற்காக இப்பரிசுகள் அனைத்தும் காத்திருந்தால் வெல்வது ஒரே குதூகலம்! இலகு, அபாரம் இல்லையா? நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே! பாவித்து முடிந்த றேனேல்ட்ஸ் குமிழ்முனைப் பேனு ஒன்றை முறையாக நிரப்பிய விண்ணப்பத்தாளுடன் அனுப்புங்கள். எவரும் போட்டியில் சேர்ந்து வெற்றி பெறலாம்.

விண்ணப்பிக்கும் முறை - இந்த விளம்பரத்தில் மறைந்திருக்கும் சகல றேனேல்ட்ஸ் குமிழ முனைப் பேனக்களையும் கண்டுபிடித்து, கூப்பனில் அவை எத்தனை என்று எழுதுங்கள். உங்கள் பெயர், முகவரியை நிரப்புங்கள். நீங்கள் விரும்பும் எந்தப் பாடசாலையின் பெயரையும் குறிப்பிடலாம்.

கூப்பன்:
இந்த விளம்பரத்தில் றெனேல்ட்ஸ் குமிழ்முனைப் பேனக்கள் ............ உண்டு.
பெயர் ............
முகவரி ............
பாடசாலைப் பெயர் ............
பாடசாலை விலாசம்: ............

முக்கிய குறிப்பு: நீங்களே கூப்பன்களைத் தயாரித்து எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு கூப்பனுடனும் பாவித்து முடிந்த றெனேல்ட்ஸ் குமிழ்முனைப் பேனு ஒன்றும் அனுப்ப வேண்டும்.

விதிகள் - 1. பென்பேல்ஸ் லிமிட்டெட், ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜஸ் லிமிடெட், தொம்சன் அசோசியேட்ஸ் (சிலோன்) லிமிடெட் ஆகிய நிறுவன ஊழியர்களையும் அவர்களின் நேரடிக் குடும்பத்தினரையும் தவிர்ந்த இலங்கைவாசிகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். வாசிக்க முடியாத, கிழிந்த, தெளிவற்ற, தபாலில் தாமதமான அல்லது காணமற்போன விண்ணப்பங்களுக்கு பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது.

2. ஒவ்வொரு மாதமும், முதலில் திறக்கப்படும் முற்றிலும் சரியான, நேர்த்தியான 43 விண்ணப்பங்களுக்கு 43 பரிசுகள் வழங்கப்படும், மேலதிகமாக முதலாம் பரிசாளர் குறிப்பிட்ட பாடசாலைக்கு ரூபா 5000/- ரொக்கப் பரிசும், இரண்டாம் மூன்ரும் பரிசாளர் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு பாடசாலைப் பெயர்பதித்த தனித்தனி 1000 றேனேல்ட்ஸ் பேனக்களும் பரிசாக வழங்கப்படும்.

3. மாதம் தோறும் பரிசு பெறுவோர் பட்டியல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

4. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. அது பற்றி எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்கப்படமாட்டாது

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய விலாசம்-றேனேலட்ஸ் போட்டி த.பெ.எண் 2110, கொழும்பு.

போட்டிச் சீட்டிழுப்பு, 1985 பெப்ரவரி 28, மார்ச் 29, ஏப்ரல் 30 ஆகிய தினங்களில் நடைபெறும்.

றேனேல்ட்ஸ் - எப்போதும் சரியாக எழுதும்.

அனுமதிப்பத்திர இலக்கம் S/428

## மனிதருள் மாமனிதன்



அமரர் தியாகராஜா பரமானந்தராஜா மக்கள் சேவையில் இன்பம் கண்ட ஒரு தலைவன். தனது அறிவையும் ஆற்றலையும் எல்லோருக்கும் பயன்படுத்திப் பல ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்களை கோப்பாய்க் கிராம சபைத் தலைவராக இருந்த சில ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி கோப்பாய் கிராமத்தை ஒரு சிறு நகரமாக்கினுர் என்ருல் மிகையாகாது.

இவர் எமது ஒப்புயர்வற்ற தமிழர் தலைவனுகவும், அரசியல் தீர்க்க தரிசியும். சட்ட மேதையுமான அமரர் ஜீ ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில், மீன்பிடி அபிவிருத்தி மந்திரியாக இருந்த காலத்தில் மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றினுர் அக்காலத்தில் இவருக்குத் திரு. பொன்னம்பலமவர்களுடன் ஏற்பட்ட தொடர்பினுல் அன்னரின வாழ்க்கையே மறுமலர்ச்சி பெற்றது.

கைத்தொழில் மீன்பிடி மந்திரியாகஇருந்த அமரர் பொன்னம்பலத்திற்கு அவருடைய அபிவிருத்தித் திட்டங்களை

(5-ம் பக்கம் பார்க்க)

வெள்ளைக்கார குழந்தைகளுக்கு ஈடாக—

# பிரிட்டனில் ஆசிய இன குழந்தைகள் சாதனை!

[லண்டன்]

பிரிட்டனில் வாழும் சிறுபான்மை இன மக்கள் மத்தியில் கல்வித்துறை பற்றிய அதிகாரபூர்வ அறிக்கை ஒன்று இப்போது வெளியாகியுள்ளது.

பள்ளிக்கூடங்களில் இனத்துவேஷம், இனப்பாகுபாடு காட்டப்பட்டு வருவதாக இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

சிறுபான்மை இனத்தவர்களின் குழந்தைகள் குறிப்பாக மேற்கிந்திய வம்சாவழியினர் பங்களாதேஷ் இனத்தவர்களின் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில். படிப்பில் முன்னேற்றம் காட்டுவதில்லையென்றும் இந்த அறிக்கை கூறியிருக்கின்றது.

ஆனால், முஸ்லீம் அல்லாத ஆசிய இனத்துக் குழந்தைகள் படிப்பில்காட்டும் சாதனைகள் பெரும்பான்மை வெள்ளை இன மக்களின் குழந்தைகளின் சாதனைகளோடு ஒப்பிடக் கூடியதாக இருக்கிறது என்றும் அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## தமிழகத்தில் 'டைம்ஸ்' நிருபர் கருத்து
## 'குடுமிபிடி'ச் சண்டைகள் பலன் தரமாட்டாது!

(சென்னை)

சென்னையில் தமிழ்ஈழ விடுதலை இயக்கங்கள் இரண்டு தமக்குள் சண்டையிட்டுக் கொள்வது பற்றி தமிழ்நாட்டில் தற்போது தங்கியுள்ள 'டைம்ஸ்' பத்திரிகை நிருபர் மைக்கேல் குறிப்பிட்டுள்ளார்.

'புளட்' இயக்கத்தின் தலைவர் திரு. உமாமகேஸ்வரனை கடத்திச்செல்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கடந்த வாரம் முயற்சிசெய்தார்கள் என்றும், அடுத்தநாள் 'புளட்' இயக்கத்தின் ராணுவப் பிரிவுத் தலைவரைக் கடத்திச்செல்ல அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள் என்றும் அவர் எழுதியுள்ளார்.

இலங்கையின் தமிழ்விடுதலை இயக்கங்களான ஆறு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டு, இப்படியாக ஒற்றுமை முயற்சி நடக்கிற நேரத்தில், இந்தவிதமான குடுமிபிடிச் சண்டைகள் பலன்தரமாட்டாதென்று மைக்கேல் கருத்து வெளியிட்டுள்ளார்.

WINDSOR
Now Showing
Daily 10-30, 2-00, 4-15
SATURN 3
Kirk Douglas, கர்க்டக்ளஸ் என்பரின் பிரமாதமான நடிப்பு, திகில், சூழ்ச்சிகள், மர்மம் நிறைந்த விண்வெளிக் கலப் பிரயாணம்.

யாழ். வின்சர் மினி
தினசரி 10-30, 2-15.
ரஜனிகாந், மாதவி, சுலக்ஷனு நடித்த
"தம்பிக்கு எந்த ஊரு"

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
சிவகுமார் - அம்பிகாவின்
தீர்ப்புகள் திருத்தப்படலாம்

றீகல்
தினசரி 10-30, 2-00
JUNGLE WARRIORS
(Full of Action-Adults)
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)

ஆனந்தி வீடியோ சினிமா
[மனோகராவில்]
கமலஹாசன், ராதா, ரேவதி நடித்த
பாரதிராஜாவின்
ஒரு கைதியின் டயறி
[கலர்]

MANOHARA
Daily 10-30, 2-51, 4-15
Muhammed Ali
in
BODY AND SOUL
(Strictly For Adults)
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும். பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

லிடோ சினிமா
10-30 am, 2-00 pm, 4-00 pm
"Still of the Night"
Adults Only

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா, பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)

## கல்லுண்டாய் குண்டுவெடிப்பு—
## நவாலி வை. எம். சி.ஏ.யில் குடும்பங்கள் தஞ்சம்!

(சுண்டுக்குளி)

அண்மையில் கல்லுண்டாயில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் அமைந்துள்ள குடியேற்றத்திட்ட வீடுகள் சில சேதமாக்கப்பட்டதை தொடர்ந்து அவ்வீடுகளில் வசித்து வந்த நான்கு குடும்பங்கள் தற்போது நவாலி வை.எம் சி ஏ, மண்டபத்தில் அகதிகளாக தங்கியுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய உடபிடைவைகள், சாப்பாடுகள் முதலியவற்றை வை. எம். சி. ஏ யினரே வழங்கி வருகின்றனர். இதனைவிட வை. எம் சி.ஏ. தலைவர் திரு. ஜே ஐ தம்பிராசா இப்பகுதியில் உள்ள மிகவும் வறுமையான பத்துகுடும்பங்களைச்சேர்ந்த பெண்களுக்கென ஒவ்வொரு சேலை வீதம் வழங்கப்பட்டுள்ளது.

## அணிவகுப்பு

(பண்டத்தரிப்பு)

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் வருடாந்த அணிவகுப்பு இன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## மனிதருள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அமுல் செய்ய நம்பிக்கையும், பேராற்றலும் செயற்திறனும்வாய்ந்த அமரர் பரமானந்தராஜா அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கிடைத்தமை யாழ் மீனவர் செய்த தவப்பயனேயாகும்.

இக் கால கட்டத்தில்த்தான் யாழ் மீனவரின் இன்னல்கள் ஒவ்வொன்ருக மறையத் தொடங்கின. நைலோன் வலை, நவீன யந்திர மீன்பிடி வள்ளங்கள் தொடக்கம் வீடமைப்புத் திட்டங்கள்வரை பெற்றுக் கொடுக்கப்பட்டன திரு பரமானந்தராஜாவின் சேவையை மேலும் விரிவடையச் செய்ய அவருக்குப் புலமைப் பரிசிலும் கிடைத்தது.

காலப் போக்கில்இவர் அமரர் ஜீ ஜீ. அவர்களின் கொள்கைகளை ஏற்று அ. இ. த.காங்கிரசின் இணைக்காரியதரிசியாக மிக்கதிறமையுடன் பணியாற்றினர். இவர் ஒரு சட்டத்தரணியாயில்லாதபோதும், தான் மேற்கொள்ளும் விஷயங்களை ஒரு ராணி அப்புக்காத்திற்குரிய வாக்குச் சாதுரியத்துடன் வாதிடும் ஆற்றல் பெற்றிருந்தார்

அன்னரின் சேவையை சிறப்பாகக் கோப்பாய்க்கிராம மக்களும், பொதுவாகயாழ் மீனவர் சமுதாயமும் என்றென்றும் மறக்க முடியாது.

கி. அம்பலவாணர்

## "இன்றைய நெருக்கடியான நிலையில்"

[கரவெட்டி]

இன்றைய நெருக்கடியான நிலையில் கிராமப்புற மக்கள் போக்குவரத்து மற்றும் பலவித பிரச்னைகளால் வைத்திய சேவை வசதிகளைப் பெறுவது கஷ்டமானதாக உள்ளது. இந்த வகையில் லயன்ஸ் கழகமும், இலங்கை குடும்ப சுகாதார நலன் சங்கமும் ஆற்றி வரும் சேவைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறு போரசிரியர் வி. கே. கணேசலிங்கம் யார்க்கரு விநாயக வித்தியாலயத்தில் நடைபெற்ற பல் பரிசோதனை நிகழ்ச்சினை ஆரம்பித்து வைத்து பேசுகையில் தெரிவித்தார்.

யாக்கரு குடும்ப சுகநல சங்கத் தலைவர் திரு. வீ. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வைத்திய கலாநிதி திரு. ஏ. உக்கிர பெருவழுதிப்பிள்ளை பரிசோதனைகளை மேற்கொண்டார்.

குடும்ப சுகாதார நல திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். பூவேந்திரன் பேசுகையில், "கிராம மக்கள் மத்தியில் இப்படியான பொது ஸ்தாபனங்களுக்கு ஆதரவு இருக்குமானல் கிராமங்கள் சுகநல அபிவிருத்தி ரீதியாக முன்னேற வாய்ப்புண்டு என்று கூறினர்.

## ட்ராக்டர் கிடைத்தது

[யாழ்ப்பாணம்]

கடத்திச் செல்லப்பட்ட யாழ். மாநகர சபையின் ட்ராக்டரும், பெட்டியும் மறுநாள் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட இந்த ட்ராக்டர் நேற்றுக்காலை திருப்பி ஒப்படைக்கப்பட்டது. (க)

## சங்காபிஷேகம்

(சுன்னுகம்)

சுன்னுகம் கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இம்மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ளது.

விசேட மேளக்கச்சேரி, பிரசங்கங்கள், விசேட இன்னிசைக்கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளன. விநாயகப் பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார்

## அரசாங்க நெசவுப் பயிற்சிக் கல்லூரி நல்லூர்

1985 / 86ஆம் வருடம் ஆரம்பமாகும் நெசவுப் பயிற்சி வகுப்புக்கு (தமிழ் மொழி மூலம்) அனுமதித்தல்.

2. கீழ்க்கூறிய தகைமைகள் உள்ளவர்கள் 31-03-85 அன்று அல்லது அதற்கு முன்னர் உதவிப் புடவைக் கைத்தொழில் பணிப்பாளர் புடவைக் கைத்தொழில் பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும்.
(ஆ) சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(இ) 01-06-85 அன்று 15 வயதிக்குக் குறையாதவராகவும் 24 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(ஈ) ஆங்கிலத்தில் அல்லது தமிழில் குறைந்தது ஜே எஸ். சி. (8ம் வகுப்பு) சித்தியடைந்தவராக இருத்தல்வேண்டும்.
(உ) அரசாங்க அல்லது அரசாங்க உதவியோடு அமைக்கப்பட்ட நெசவு நிலையங்களில் குறைந்தது மூன்று வருடம் பயிற்சி பெற்றதற்குரிய தராதரப் பத்திரம் உடையவர்களாக இருத்தல்வேண்டும்.

3. போட்டிப் பரீட்சை நடாத்தியே பயிற்சியாளர் தெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சைக்குரிய பாடங்கள்:-

1. மதிப்பிடல் 3. இயந்திரம் வரைதல்.
2. நெசவுப்பேட்டு 4. செய்கை முறை.

4. தெரிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் காலத்தில் ஒரு நாளுக்குரிய படி ரூபா 05/- வழங்கப்படும்.

மேலே கேட்டுள்ள விபரங்களுடன் தனது முழுப் பெயர், முகவரி, தேசிய இனம், தேசிய அடையாள அட்டையின் எண், பிறந்த திகதி, ஆணு / பெண்ணு, விவாகமானவரா இல்லையா, மூன்று நற்சான்றிதழ்களைத் தந்தவர்களின் பெயர்களையும் விலாசங்களையும் உள்ளடக்கி சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

ஒப்பம்
சி. பாலசுப்பிரமணியம்,
உதவி புடவைக் கைத்தொழில் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

2274

மிளகாய் இலைச் சுருளைத் தடுதது
அதிக விளைச்சலைப் பெறுங்கள்
BASF
குமுலுஸ் எஸ்
நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்
- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது
- மரக்கறி பயிர் வகைக்ளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது




இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.
குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50
கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்
Metropolitan
M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2, ஞானர்த்தபிரதீப மாவத்தை, த பெ. இல 9
(முன்னுள் மருதானைரோட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965——9

# சீ-நோர் தொழிற்சாலைக்கொள்ளை "தொழிலாளர்வர்கத்துக்கு நன்மைபயக்காத செயல்"

## விஜயானந்தன் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

'-குருநகரிலுள்ள சீநோர் வலைத் தொழிற்சாலையில் மூன்றரை லட்சம் பெறுமதியான வலைகளையும் பதினேழரைஅடி நீள கல்நார்ப்படகும் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் மனிதாபிமானம் படைத்த இயக்கங்களினுலோ அன்றி தனி மனுதனுலோ கண்டிக்கவேண்டியசம்பவமாகும்."

இவ்வாறு லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் வடபிரதேச செயலாளரும், வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழுவின்அமைப்பாளருமான திரு எஸ்.விஜயானந்தன் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''சமீப காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்று வரும் இம்மாதிரியான சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் வெறுப்புணர்ச்சியை அதிகரித்து வருவது கண்கூடே.

இவற்றைச் செய்வது இயக்கங்களா, திருடர் கோஷ்டிகளா அல்லது சமூகத்துரோகிகளா என இனம்காணமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள ஒரு சில தொழிற்சாலைகளை மூடி தென்னிலங்கைக்கு எடுத்துச்செல்வதற்கும், எமது பிரதேசத்திலுள்ள தொழிலாளர்களை வேலையற்றவர்களாக்கவுமே இவ்வித வேண்டத்தகாத செயல்கள் உதவும். எமது பிரதேசத்திலுள்ள தொழிலாள வர்க்கத்திற்கு இப்படியான செயல்கள் எதுவிதத்திலும் நன்மை பயக்கமாட்டாது. இதனை உணர்ந்து சகல சக்திகளையும் இதற்கு எதிராககுரல் கொடுத்து செயல்படும்படி பணிவாக வேண்டுகின்றோம்.

சாதாரண பொதுமக்களின் எதிர்ப்பின் மத்தியில் எந்தவிதமான விடுதலைப் போராட்டமும் வெற்றிபெறப்போவதில்லை. இதனை உணர்ந்து செயல்படுவது அவசியம். இவ்வாறான தொடர்ச்சியான செயல்பாடுகளுக்குப் பொறுப்பானவர்கள்யாராயிருந்தாலும் பொதுமக்கள் இனம்காணும்படி செய்வதும் பொதுமக்கள் நலன்விரும்பிகளின் கடமையாகும்.''

## பொத்துவில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மரணமடைந்த 16 பேரில் பொத்துவில் முன்னாள் எம்.பி.யும் மாவட்ட அமைச்சருமான காலஞ்சென்ற எம். கனகரத்தினத்தின் மகன் ரஞ்சன் கனகரத்தினத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### திருமதி கோமதிஅம்மாள் நாகேஸ்வரசர்மா

மட்டுவில் கல்வளவைச் சேர்ந்த கோமதிஅம்மாள் நாகேஸ்வரசர்மா காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரசர்மாவின் அன்புமனைவியும், ஜெயஹரன், ஸ்ரீஹரன், அனன்யா ஆகியோரின் தாயாரும், காலம் சென்ற செல்லையா ஐயர், தங்கம்மா ஆகியோரின் அன்புமகளும், காலம்சென்ற ஜெகநாத ஐயர், ரங்கம்மாவின் மருமகளும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் மட்டுவிலில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

2309

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சதாசிவம் சிவநாதன்

ஆறுமுகம் சதாசிவம் சிவநாதன் (இளைப்பாறிய மாவட்ட முகாமையாளர் இலங்கை வங்கி) காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் சதாசிவம் ருக்மணி தம்பதிகளின் அன்புப்புதல்வனும், சுப்புலக்சுமியின் அன்புக் கணவரும், கல்யாணியின் அன்புத் தந்தையும், வடிவாம்பிகையின் சகோதரரும், பஞ்சாட்சரவேல், சங்கரலிங்கம் ஆகியோரின் சகலனும், புலேந்திரன் (CANADA), மோகன் (HOLIDAY INN) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 16-3-85 காலை 9மணிக்கு 15A மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இருந்து ஈமக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

2289

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுப்பிரமணியம்

நவாலி வடக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் திரு பொன்னையா சுப்பிரமணியம் காலமானர். இவர் கோணேஸ்வரி, ஸ்காந்தவேள், கலாவதி. கலைவாணி, குமாரவேள், யோகீஸ்வரன், கலைச்செல்வி, நாகேந்திரன், விஜயலட்சுமி, கணதீபன், ஜெயவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகநாதன், சிவஞானசௌந்தரி, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று ஆரியம்பிட்டியில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

2310


## இலங்கை வரும்-..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் திரு ரமேஷ் பண்டாரி விரைவில் விஜயம் செய்யவுள்ளார்.

இவரது விஜயம் அடுத்த வாரம் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்யும் இவர் பின்னர் பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், இலங்கை ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

## திருநெல்வேலி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

வந்தவர்கள் யந்திரத்துப்பாக்கி, கைத்துப்பாக்கிகள் வைத்திருந்தாக கூறப்படுகிறது. (க)

## பஸ் சேவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களுக்கான இந்த மாதச் சம்பளம் 10 வீதமானோருக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும், கோண்டாவில்டிப் போவில் சுமார் ஆயிரத்து நூறு தொழிலாளர் வேலைசெய்வதாகவும் இவர்களுக்கு 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதற்கு தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேநிலையில்தான் பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களும் மெதுவாக இயங்குவதாகச் சொல்லப்படுகிறது.

போதியளவு பஸ் சேவைகள் நடைபெற்றால்தான் முழுமையான சம்பளம் வழங்கமுடியும் என்று தெரிவித்த ஒரு உத்தியோகத்தர், டீசல் பெறுவதற்கு பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்குப் போதியளவு பணத்தைச் சபை செலுத்தியிருந்தும் பணத்துக்குரிய டீசல் இன்னமும் வழங்கப்படவில்லை என்றார்.

கடந்த 4-ம் திகதி தொடக்கம் டீசல் தள்ளப்பாடு நிலவி வருகிறதென்றும் நேற்று மட்டும் 5 ஆயிரம் லீட்டர் டீசல் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் வழங்கியிருக்கிறதென்றும் இந்த டீசல் இன்று சனிக்கிழமை 10 மணியுடன் முடிந்துவிடும் என்றும் அந்தஉத்தியோகத்தர் சொன்னார்.

பாதுகாப்பின்மைகாரணமாகப் போதியளவு டீசல் வழங்கமுடியாமலிருப்பதாக பெற்றோலியம் கூட்டுத்தாபனம் சொல்கிறதாம். [மா]

## வண. பஸ்தியன்...

(1ம் பக்கத் தொடாச்சி)

பரிய பூமி ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது போல இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய பூமியிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்றும் அவர் கூறினர்.

இக்கூட்டத்தொடரில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுப் பிரதிநிதி பேசுகையில் கூறியதாவது:

''இலங்கையில் கடந்த சில மாதங்களாக மனித உரிமை மீறும் சம்பவங்கள் அதிகரித்து வந்துள்ளன. வன்முறை எதிலும் சம்பந்தமில்லாத பலர் அநியாயமாக கொள்ளப்பட்டு வருகின்றனர்.

''டிசம்பர் 4ம் திகதி மன்னரில் ஒருராணுவவீரர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து 100 அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டனர். ஆயுதப் படையினரிடையே ஒழுக்கத்தை ஏற்படுத்தி அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஆகஸ்ட்டுக்கும் டிசம்பருக்குமிடையே ராணுவ நடவடிக்கையால் பாதிக்கட்பட்ட 74 சம்பவங்கள் குறித்து 108 சத்தியக்கடதாசிகள் சர்வதேச ஜூரர்கள் ஆணைககுழுவுக்கு கிடைத்தன'' என்றார்

ஆஸ்திரேலியப் பிரதிநிதியும் இக்கூட்டத்தில் இலங்கைச் சம்பவங்களுக்குக் கவலை தெரிவித்தார். (ரா)

# கிளிநொச்சி முற்றுகையில் கைதானோர் விடுதலை

(கிளிநொச்சி-நிருபர்)

கிளிநொச்சி நகரம் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு பொதுமக்கள் றெட்றிக்கோ முற்றவெளிக்கு கொண்டுசெல்லப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையின்போது கைதான சுமார் 40 இளைஞர்கள் ஆணையிறவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

றெட்றிக்கோ மைதானத்தில்கைதான இளைஞர்களை விடுவிக்குமாறு கிளிநொச்சிபிரஜைகள் குழுவினர் சம்பந்தப்பட்டோரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி நகரம் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட போது பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரி நமது நிருபருக்களித்த பேட்டியில்:

''பொதுமக்கள் இராணுவத்தைக்கண்டு ஓடாதீர்கள். அவர்களைக்கண்டால் கையை உயர்த்திக்கொண்டு நில்லுங்கள். பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் எமது விசாரணைகளை நாம் தொடர்வோம் என்றார்,

றெட்றிக்கோ அரங்கில் பொதுமக்கள் மத்தியில் இராணுவ அதிகாரி மேஜர் விஜயரெத்தின உரை யொன்றையும் நிகழ்த்தினர்.

## யாழ். மாநகரசபை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனுல் கட்டணங்கள் அறவிடுவதிலும், சம்பளங்கள் முதலியவற்றை ஊழியருக்குச் செலுத்துவதிலும் நாம் மிகவும் இக்கட்டான நிலையை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

''இம்மாநகராட்சி மன்றத்தில் சுமார் 1300 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். அதற்றுள் சுமார் 950 பேர்வரை தொழிலாளர் தரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் 35 வீதமானவர்ள் கையெழுத்துக்கூடப் போடக்கூட முடியாதநிலையில் உள்ள நகரசுத்தி, மலசுத்தித் தொழிலாளர் தரத்தைச் சேர்ந்தவர்கள். இந்நிலையில் அரசாங்கஇலாகாக்கள் செயற்படுவதுபோல காசோலை மூலமாக எல்லோருக்கும் சம்பளத்தை வழங்கினுல் நமது சமூகத்தின் அடித்தளத்திலிருக்கும் இவர்கள் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிப்பார்கள் என்பதை நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும். (க)

## சுருவிலில் அல்ல

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள சுருவில் கிராமத்தில் நேற்றுமுன்தினம் மக்கள் எதுவித பதற்றமுமின்றிஅன்றாடக் கடமைகளில் ஈடுபட்டனர். சுருவில் கிராமத்துக்கு பின்புறத்தேயுள்ள புங்குடுதீவுப்பகுதியில் ஹெலிகாப்டரில் வந்திறங்கிய ராணுவத்தினர் கடற்படையினருடன் சேர்ந்து தேடுதல் நடத்தினர்.

சுருவில் கிராமத்தில் ராணுவத்தினர் சோதனையிட்டதாக நேற்றைய 'ஈழநாடு' வில் வெளிவந்த செய்தியில் உண்மையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ நடவடிக்கை..

(1ம்பக்கத் தொடர்ச்சி)

டும்'' என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு. குஜீத் ஆலன்கான் தெரிவித்துள்ளார்.

நேற்று லோக்சபாவில்இலங்கைப் பிரச்னை தொடர்பாக அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துப் பேசிய அமைச்சர், இலங்கையிலுள்ள இனப் பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்பட்டு இந்தியாவுக்கு வந்திருக்கும் தமிழ் அகதிகள் திரும்பவும் தாய்நாட்டுக்கு திரும்பிச் செல்லும் நிலையை இலங்கை அரசு உருவாக்க வேண்டும்'' என்றும் கூறினர்.

## இந்தியப் பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சீக்கியத் தலைவர்கள் பலர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்றும், சீக்கியர்களுக்கு சுயாட்சிக்காரியுள்ள அகாலிதள் கட்சியினருடனான பேச்சு வார்த்தைகள் இந்திய அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்பட்ட விதத்தில் மட்டும் நடாத்த தாம் முடிவு செய்துள்ளதாகவும் திரு. ரஜீவ் தெரிவித்தார்.

## கட்டடங்கள் அகன்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் கார், சைக்கிள் செட் கட்டடங்கள் யாவும் நேற்று அகற்றப்பட்டது

இதேபகுதியில் உள்ள கட்டடத்தில் இருந்த சுகாதாரப் பகுதி கடந்த மாதம் நகர மண்டபத்திற்கு மாற்றப்பட்டது தெரிந்ததே. [க]

## மீன்பிடிக்க...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்புக்கு இத்தகைய கண்காணிப்பு வலயம் அவசியமானதென்றும். நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காகவே கண்காணிப்பு வலயம் பிரகடனம் செய்யப்பட்டது என்றும் கூறிய அமைச்சர் கடற்படை அதிகாரிகளுடன் விரிவான முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர்: சில நிபந்தனைகளின் அடிப்படையில் மீன்பிடிக்க அனுமதி அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்,

புங்குடுதீவிலிருந்து பேசாலை வரையும் பாலக்குடா கற்பிட்டித்தீவுகள் வரையும் முல்லைத்தீவு முதல் கொக்கிளாய் வரையும் உள்ள பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளது. இந்தப் பகுதிகளுக்குள் மூன்று மைல் எல்லைகுள் காலை 3 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் மீன்பிடிக்கலாம். பயன்படுத்தப்படும் மீன்பிடி வள்ளங்களின் மோட்டார் பதினைந்து குதிரை சக்திக்கு குறைவாக இருக்கவேண்டுமென்றும் ஒருவள்ளத்தில் நான்கு பேர் மட்டுமே செல்லவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளைமீன்பிடிப்பதற்கு எந்த ஊரிலிருந்து அனுமதி வழங்கப்படும். என்பது பற்றியும் எப்போது தொடக்கம் மீன்பிடிக்கலாம் என்பது பற்றியும் விரைவில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். [ரா]

## மத்திய அரசு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபையில் பேசிய அ.தி.மு.க உறுப்பினர் திரு.பி.என். ராமச்சந்திரன் ''இலங்கைத் தமிழ் மக்களை மத்திய அரசும், மாநில அரசும் நிச்சயம் காப்பாற்றியே தீரும்'' என்று தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka unde Eeelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.